# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2054 • பிப்ரவரி 12, 2023

Weekly E-paper • February 12, 2023




## 10% EWS பார்ப்பன இடஒதுக்கீடு எதிர்ப்பு மாநாடு

கோவை

## நீதியரசர் நியமனங்களும், அரசியலமைப்பும்..!

வழக்கறிஞர் கா. இளங்கோ

## ‘அதானி’ என்னும் முழு பூசணிக்காய்

தலையங்கம்

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● பிப்ரவரி 12, 2023

Weekly E-paper ● February 12, 2023

# 10% EWS பார்ப்பன இடஒதுக்கீடு எதிர்ப்பு மாநாடு

## கோவை




பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு இட ஒதுக்கீடு என்ற போர்வையில் நடைபெறுகின்ற இந்த சமுதாயக் கொள்ளையை முழுவதுமாக இன்னும் தமிழ்ச் சமுதாயம் மட்டுமல்ல, இந்தியாவிலிருக்கிற பல்வேறு அரசியல் கட்சிகள்கூட உணரத் தலைப்படாத காலத்தில், அதனுடைய ஆபத்துகளை அறிந்து, அதனைத் தொடக்கத்திலிருந்தே எதிர்க்கின்ற அரசியல் கட்சி உண்டென்றால் அது திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதை எனக்கு முன்னாலே உரையாற்றியவர்கள் எல்லோரும் பேசினார்கள்.

அந்த முன்னெடுப்பைக் கலைஞர் எடுத்தார்; அதற்குப் பிறகு இன்றைக்கு திராவிட மாடலை இந்தியாவிற்கு அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கிறவர், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற நமது மகத்தான தலைவர்.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அதனை வழிமொழிந்தது மட்டுமல்ல; வலுவான குரலை உச்சநீதிமன்றம்வரை எழுப்பியிருக்கிறார்.

அரசியலமைப்புச் சட்டத்தில் ‘*socially and educationally backward classes*’ என்றுதான் அம்பேத்கர் கொண்டு வருகிறார். சமூகத்திலும், கல்வியிலும் பின்தங்கியவர்களுக்குதான் இட ஒதுக்கீடு, வறுமையில் இருப்பவர்களுக்கு அல்ல.

வெள்ளைக்காரர்களுக்கு ஒரு மனிதாபிமானம் இருந்தது. கல்வியை அனைவருக்கும் வழங்க வேண்டும் என்று பரிவோடு எண்ணினர். இட ஒதுக்கீடு வழங்கினர். அப்போது யாரும் போராடவில்லை. போராடும் நிலைமையில் தாழ்த்தப்பட்ட மக்கள் இல்லை. அவர்களுக்கு அத்தகைய துணிவே கிடையாது. அப்படியான மனநிலையை, தாழ்வு மனப்பான்மையை ‘ஜாதி’ என்கிற மனோபாவம் கொடுத்தது. இந்த ஜாதி என்ற உளவியல் பண்பை உடைப்பதுதான் சமூகநீதி; அப்படி உடைப்பதற்காகத்தான் இட ஒதுக்கீடும் கல்வியும்.

வெள்ளைக்காரர்களைப் பெரியார் வரவேற்றதற்கு என்ன காரணம்? வெள்ளைக்காரர்கள் கொள்ளைக்கார பிராமணர்களுக்கு எழுதிக் கொடுத்த ‘*Made over*’ தான் சுதந்திரம் என்றாரே! “எனக்கு சுதந்திர நாள் துக்கநாள்தான். ஆங்கிலேயர் வெளியேறி விடுவதால் ஜாதி ஒழியப் போவதில்லை; தாழ்த்தப்பட்டோர்களுக்கும் பிற்படுத்தப் பட்டோர்களுக்கும் கல்வி வந்துவிடப் போவதில்லை; வெள்ளையராவது மனிதாபிமானத்தோடு நடந்து கொண்டனர். நமக்குப் படிப்பைக் கொடுத்ததும், மனிதனாக நம்மை நடத்தியதும் வெள்ளைக்காரன்தான்” என்றார் பெரியார்.

2000 ஆண்டு காலமாக மறுக்கப்பட்ட கல்வியை நான் கேட்காமலேயே கொடுக்கும் கொடை மனத்தைப் பெற்றிருந்தான் வெள்ளைக்காரன்; ஆனால் கேட்காமலேயே எங்கள் உரிமையை நாடாளுமன்றத்திலே வைத்து திருடிக் கொண்டு போகிறாயே; நீங்கள் நல்லவர்களா? அவர்கள் நல்லவர்களா?.

எல்லாவற்றிற்கும் பதில் பெரியாரிடம் இருக்கிறது. வேறெங்கும் போக வேண்டியதில்லை.

**ஆ. இராசா**

(மாநாட்டில் பேசிய உரையிலிருந்து சிறு பகுதி)

# நீதியரசர் நியமனங்களும், அரசியலமைப்பும்..!

**வழக்கறிஞர் கா. இளங்கோ,**

**மாநிலத் துணைத் தலைவர், அகில இந்திய வழக்கறிஞர்கள் சங்கம்**

**வழக்கறிஞர் விக்டோரியா கௌரி அவர்கள் நீதிபதியாக நியமிக்கப்படும் முன்னர் எழுந்த குற்றச்சாட்டு குறித்து உங்கள் பார்வை.**

உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமனம் செய்வது, உச்சநீதிமன்றத்தின் அமைப்பான கொலீஜியம் என்ற அமைப்பாகும். அதில் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி மற்றும் இரண்டு மூத்த நீதிபதிகள் இருப்பார்கள். அவர்கள் பரிந்துரைக்கும் பெயர்களை ஒன்றிய அரசாங்கம் பரிசீலனை செய்து, அவர்கள் அதை அங்கீகரித்தால், அந்த நபர்களை உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிப்பார்கள். கொலீஜியம் என்கிற அமைப்பு ஒன்றிய அரசுக்குப் பெயர்களைப் பரிந்துரை செய்யும்போது, ஒன்றிய அரசின் உளவுத்துறை (Intelligence Bureau) அப்பரிந்துரை குறித்தும், அவர்களுடைய நடவடிக்கைகள் குறித்தும், அந்த நபர்கள் வழக்கறிஞராக இருக்கும்போது என்ன செய்துகொண்டிருந்தார்கள் போன்ற செய்திகளைச் சேகரித்தும் ஒன்றிய அரசுக்கு ஓர் அறிக்கையை வழங்குவார்கள்.

அந்த அறிக்கையின் அடிப்படையில் அந்த நபர்களின் பெயரை நீதிபதிகள் நியமனப் பட்டியலில் சேர்க்கலாமா வேண்டாமா என்று ஒன்றிய அரசு முடிவு செய்து மீண்டும் கொலீஜியத்திற்கு அனுப்பும். வழக்கறிஞர் ஜான் கிறிஸ்டியன் அவர்களின் பெயரை இதே போன்ற பரிசீலனையில் அங்கீகரிக்க மறுத்து, அது மீண்டும் கொலீஜியத்திற்கு அனுப்பப்பட்டது. அதற்கு ஒன்றிய அரசு கூறிய காரணம் அவர் ட்விட்டரில், பிரதம மந்திரியை விமர்சித்து ஒரு சில பதிவுகள் செய்தார் என்பது. ஆனால் உச்சநீதிமன்றம் அதை ஏற்க மறுத்துவிட்டது. வழக்கறிஞர் ஜான் கிறிஸ்டியனை மீண்டும் பரிந்துரைத்தார்கள். மீண்டும் பரிந்துரைத்த பெயரை கட்டாயம் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.



**விக்டோரியா கௌரி**

தற்போது வழக்கறிஞர் விக்டோரியா கௌரி அவர்கள் நீதிபதியாக நியமிக்கப்படுவதற்கு முன்பு அவர் மீது அப்படியான குற்றச்சாட்டுகள் எழுந்தன. குறிப்பாக, அவர் மதச்சார்பின்மைக்கு எதிராக, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முக்கிய கூறான மதச் சார்பின்மைக்கு எதிராகப் பேசி வந்தார் என்பது அவர்மீதான் குற்றச்சாட்டு. அதுமட்டுமன்று. அவர் பி.ஜே.பி யின் மகிளா மோர்ச்சா என்ற அமைப்பின் அகில இந்திய பொதுச்செயலாளராகவும் செயல்பட்டார் என்ற குற்றச்சாட்டுகளும் இருந்தன. இதை மத்திய அரசின் உளவுத்துறை அரசாங்கத்திடம் ஏன் தெரிவிக்கவில்லை என்று தெரியவில்லை.

இந்தப் பிரச்சினையில்தான் திருமதி விக்டோரியா கௌரி அவர்களின் நியமனத்தை எதிர்த்து வழக்கறிஞர்கள், குறிப்பாக அகில இந்திய வழக்கறிஞர்கள் சங்கம் போராட்டம் நடத்தியது. மூத்த வழக்கறிஞர் வைகை, செல்வி அன்ன மேத்யூ, வழக்கறிஞர் ஜான் சத்யன் ஆகியோர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார்கள். கொலிஜீயம் பரிந்துரை செய்த பிறகு, அவர்கள் அனைத்து விடயங்களையும் கணக்கில் எடுத்த பின்புதான் பரிந்துரை செய்திருப்பார்கள் என்ற அடிப்படையில் கொலீஜியத்தின் பரிந்துரைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க இயலாது என்று வழக்கு நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

**இந்த நியமனம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானதா?**

இந்திய அரசியலமைப்புச் சட்டம் தன் முகவுரையில், இந்த நாடு ஒரு *Sovereign, Socialist, Secular, Democratic, Republic* போன்ற விழுமியங்களை உள்ளடக்கி உள்ளது. இதற்கு எதிராக யார் பேசினாலும் அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கூறுகளுக்கு விரோதமாகச் செயல்படுகிறார்கள் என்றே பொருள்படும். கௌரி அவர்கள் மீது இதுபோன்ற குற்றச்சாட்டுகள் முன்கூட்டியே இருந்த நிலையில், அதைக் கணக்கிலெடுத்துக் கொண்டுதான் பரிந்துரை செய்திருக்கிறார்கள் என்று சொல்வது என்னைப் பொறுத்தவரை தவறாகும்.

**அரசியல்வாதிகளையோ, அரசியல் சார்புடையவர்களையோ நீதிபதிகள் பொறுப்பிற்கு நியமிப்பது சரியாகுமா?**

அரசியல் கட்சியின் உறுப்பினர்களாக இருந்தவர்கள் -சொல்லப்போனால் இதற்குமுன் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த திரு.ரத்னவேல்பாண்டியன் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் திருநெல்வேலி மாவட்டச் செயலாளராகச் செயல்பட்டவர். இது ஒன்று. முன்னாள் நீதிபதிகள் சந்துரு அவர்களும், அரிபரந்தாமன் அவர்களும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களாக இருந்தவர்கள். ஆனால் இவ்விருவரைப் பொறுத்தவரை நீதிபதியாகப் பதவியேற்பதற்குப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பாகவே அவர்கள் கட்சியில் இருந்து வெளியே வந்துவிட்டார்கள்.

திரு.ரத்னவேல்பாண்டியன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினராகவும், மாவட்டச் செயலாளராகவும் செயல்பட்டார் என்றாலும், அவர் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராகச் செயல்பட்டாரா என்பதைத்தான் நாம் முக்கியமாகப் பார்க்கவேண்டும். வழக்கறிஞர்களைப் பொறுத்தவரை ஏதாவது ஒரு கட்சியில் இருப்பார்கள். கட்சியில் உறுப்பினராக இருப்பதே ஒரு தகுதிக் குறைவாக நாம் பார்க்க இயலாது. ஆனால் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராக இருப்பவர்களை நாம் அரசமைப்புச் சட்டத்தின் பொறுப்புகளை நிறைவேற்றும் பதவிகளுக்கு நியமனம் செய்யாமல் இருப்பதுதான் சரியானது. இதுவே எனது கருத்து.

**நேர்காணல்: வெற்றிச்செல்வன்**


3% பார்ப்பனர்களுக்கு 10 % EWS இட ஒதுக்கீடு
எதிர்ப்பு மாநாடு
வகுப்புரிமை நாயகர் முத்தையா முதலியார்
நினைவரங்கம்
திராவிடத்தீரர் பனகல் அரசர்
நினைவு மேடை
களப்போராளி தோழர் சம்பத்
நினைவுக் கொடி மரம்
கலை நிகழ்ச்சி
ஆய்வரங்கம்
சமுதாய அரங்கம்
அரசியல் அரங்கம்
திராவிட இயக்கத் தமிழர் பேரவை
பிப்ரவரி 10 வெள்ளி
மதியம் 02 மணி முதல்
இரவு 09 மணி வரை
மாநகராட்சி கலையரங்கம்
இரத்தினசபாபதி (ஆர்.எஸ்) புரம்,
கோவை


மாலை 6.30 மணி - அரசியல் அரங்கம்
தலைமை
சிற்பி. செல்வராசு
துணை பொதுச் செயலாளர்
நோக்கவுரை
பொள்ளாச்சி மா. உமாபதி
துணைத் தலைவர்
வரவேற்புரை
கா.சு. நாகராசன்
அமைப்புச் செயலாளர்
தொடக்கவுரை
நா.கார்த்திக் Ex. MLA
கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் திமுக
தொ.அ. இரவி
கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் திமுக
தளபதி முருகேசன்
கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் திமுக
தீர்மானங்கள் முன்மொழிதல்
தோழர் லட்வின்
தோழர் செல்வின் சவுந்தரராஜன்
தோழர் லாரன்ஸ்
தோழர் உதயகுமார்
தீர்மானங்கள் வழிமொழிதல்
தோழர் சாந்தகுமார்
வி.பி.கோவிந்தராஜ்
சண்முகவேல் பிரபாகரன்
திருப்பூர் சூர்யா
முன்னிலையுரை
எழில் இளங்கோவன்
பொருளாளர்
சிங்கராயர்
துணை பொதுச் செயலாளர்
பெல்ராசன்
கருஞ்சட்டைப் பதிப்பகம்
சாராதா தேவி திராவிட மங்கை தேவராசு இளங்கோ மணிகண்டன் பாபு
கருத்துரை
இரா. அதியமான்
ஆதித்தமிழர் பேரவை
உ. தனியரசு Ex. MLA
தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை
சி.வெண்மணி
திராவிடர் தமிழ் கட்சி
தோழர் தீனா
பெரியார் சிந்தனையாளர் இயக்கம்
சிறப்புரை
ஆ. இராசா MP
துணைப் பொதுச் செயலாளர் - திமுக
சுப.வீரபாண்டியன்
பொதுச் செயலாளர்
நன்றியுரை : ஆவை மைதிலி மாவட்டத் துணைச் செயலாளர்


பிற்பகல் 02 மணி - கலை நிகழ்ச்சி
பறை இசை : நிமிர்வு கலையகம்
கொள்கைப் பாடல் : மக்கள் பாடகர் கன்னையா
பிற்பகல் 02.30 மணி - மாநாடு தொடக்கம்
மாநாட்டுத் திறப்பாளர்
சேலம் புவனேசுவரி
மேனாள் மாமன்ற எதிர்க்கட்சித் தலைவர்
கொடியேற்றி வைத்தல்
திரு. தேன்மொழி
ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்
திரு நா.மாலதி
மாநகராட்சி கல்விக்குழுத் தலைவர்
வாழ்த்துரை
திரு த.தெய்வயானை
மாநகராட்சி மண்டலத் தலைவர்
திரு மீனாலோகு
மாநகராட்சி மண்டலத் தலைவர்
மாநாட்டு வரவேற்புரை : தோழர் கல்பனா
வீரபாண்டி - கூடலூர் நகரத் தலைவர்
முன்னிலை : தோழர் சுருதி MSC.,
மாணவரணிச் செயலாளர்
நன்றியுரை : தோழர் வேலுநாச்சியார்
மாணவரணி
பிற்பகல் 03 மணி - ஆய்வரங்கம்
தலைமை : இரா. உமா
கொள்கை பரப்புச் செயலாளர்
வரவேற்புரை : தோழர் சந்தானம்
இணை ஒருங்கிணைப்பாளர்
முன்னிலை : தோழர் புலேந்திரன்
பேராசிரியர் சாமி
தோழர் வேடசந்தூர் ரவி
வழக்கறிஞர் வெ. பிரபாகரன்
கருத்துரை : வழக்கறிஞர் சித்திக்
தி.மு.க செய்தித் தொடர்பு து. செயலாளர்
உ.பி. சு . கவுதமன்
தி.மு.க சூலூர் நகரச் செயலாளர்
சிறப்புரை : கோ.கருணாநிதி
OBC கூட்டமைப்பு
வழக்கறிஞர் சே. மதிவதனி
திராவிடர் கழகம்
நன்றியுரை : திருப்பூர் கதிர்
மாநகர இளைஞரணி
மாலை 04:30 மணி - சமுதாய அரங்கம்
தலைமை : சரவண பெருமாள்
இசைமணப் பேராசிரியர் மதுப் பட்டம்
வரவேற்புரை : விஜயராணி
திராவிட நட்புக் கழகம்
முன்னிலை : இராம வெங்கடேசன்
அருள்தாஸ்
ரஃபீக்
ராணி
(சமூகநீதிப் பாதுகாப்புக் கூட்டமைப்பு)
கருத்துரை : டாக்டர் இரா.தங்கபழம்
யாதவ மகா சபை
இருகூர் A.அசோகன்
செங்குந்தர் மகா ஜன சங்கம்
சிறப்புரை : தோழர் T.R. சந்திரசேகர்
நாடார் சங்கம்
பா.ச. பாலசிங்
சமூக நீதிப் பேரவை
நன்றியுரை : பொள்ளாச்சி இராசுக்குமார்
நகர பேரவைத் தலைவர்


படத்திறப்பு
திறப்பாளர்
டாக்டர்.நடேச முதலியார் : தோழர் தம்புராஜ்
சர்.பிட்டி.தியாகராயர் : வழக்குரைஞர் சிலம்பரசன்
டாக்டர்.டி.எம்.நாயர் : தோழர் கேசவன்,ஆவை செந்தில்
பனகல் அரசர் : தோழர் ஜெயப்பிரகாஷ்
முத்தையா முதலியார் : தோழர் ஆவை. கோபிநாத்
சர்.ஆர்.கே.சண்முகம் செட்டியார் : தோழர் நவநீதன்
இரத்தின சபாபதி முதலியார் : தோழர் செ.கார்த்திக் பிரபு
ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் : தோழர் சுப. உதயகிரி
பச்சைத் தமிழர் காமராசர் : தோழர் நாகக்குமார்
தந்தை பெரியார் : தோழர் அனுப்பட்டி பிரகாசு
புரட்சியாளர் அம்பேத்கர் : தோழர் தென்றல் சேகர்
ஊ.ப.அ. சௌந்திரபாண்டியனார் : தோழர் சுந்தர வதனம்
சர் ஏ.டி.பன்னீர்செல்வம் : தோழர் தமிழ் குமரன்
புரட்சிக் கவிஞர் : தோழர் செ.தமிழ்மணி
பேரறிஞர் அண்ணா : தோழர் முருகானந்தம்
முத்தமிழறிஞர் கலைஞர் : தோழர் சூர்யா
வி.பி.சிங் : தோழர் அர்சுன், அர்ஜுன் பாலா
இனமானப் பேராசிரியர் : தோழர் தி. கண்ணப்பன்
வே.ஆனைமுத்து : வழக்குரைஞர் முருகேசன்
அனிதா : தோழர் ஜெகன்
3% பார்ப்பனர்களுக்கு 10 % இட ஒதுக்கீடு... இது நியாயந்தானா?
திராவிட இயக்கத் தமிழர் பேரவை
96003 25418 - 95008 17755
88700 43669


10% EWS பார்ப்பன இட ஒதுக்கீடு
எதிர்ப்பு மாநாடு - கோவை
10 பிப்ரவரி 2023
திராவிட இயக்கத் தமிழர் பேரவை


ஸ்ரீனிவாஸ்


ஸ்ரீனிவாஸ்


ஸ்ரீனிவாஸ்


ஸ்ரீனிவாஸ்


ஸ்ரீனிவாஸ்


ஸ்ரீனிவாஸ்


ஸ்ரீனிவாஸ்

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !

கருஞ்சட்டைத் தமிழர்

## 'அதானி' என்னும் முழு பூசணிக்காய்

ஊழல், அதிகாரத்தைத் தன்னலத்திற்காகப் பயன்படுத்துதல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளால் பதவி விலகிய / விலக வற்புறுத்தப்பட்ட தலைவர்கள் சிலரின் பட்டியல்:

- பிரேசிலின் முன்னாள் அதிபரான தில்மா ரூசெஃப், ஊழல் மற்றும் நிதி முறைகேடு குற்றச்சாட்டில் 2016ஆம் ஆண்டு பதவி நீக்கம் செய்யப்பட்டார்.
- தென் கொரியாவின் முன்னாள் ஜனாதிபதியான பார்க் கியூன்-ஹே, 2016 இல் பதவி நீக்கம் செய்யப்பட்டார். பின்னர் இலஞ்சம், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் வற்புறுத்தல் ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் தண்டனை பெற்றார்.
- மலேசியாவின் முன்னாள் பிரதமர் நஜிப் ரசாக், அரசுக்குச் சொந்தமான முதலீட்டு நிதியான 1மலேசியா டெவலப்மென்ட் பெர்ஹாட் (1MDB) தொடர்பான மாபெரும் ஊழலில் சிக்கி 2018 இல் பதவி விலகினார்.
- இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் டேவிட் கேமரூன், 2016 ஆம் ஆண்டு, பிரெக்சிட் பேச்சுவார்த்தைகளை அவர் கையாண்டதற்காகவும், பனாமா ஆவணங்களில் வெளிப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளுடனான அவரது தொடர்புகளுக்காகவும் அவர் விமர்சனங்களை எதிர்கொண்டதைத் தொடர்ந்து பதவி விலகினார்.
- பெருவின் முன்னாள் ஜனாதிபதியான ஆல்பர்டோ புஜிமோரி, 2000ஆம் ஆண்டு பதவி விலக நிர்பந்திக்கப்பட்டார். பின்னர் மனித உரிமை மீறல்கள் மற்றும் ஊழலுக்காக தண்டிக்கப்பட்டார்.
- நவாஸ் ஷெரீப் - பாகிஸ்தான் முன்னாள் பிரதமர், ஊழல் குற்றச்சாட்டின் பேரில் உச்ச நீதிமன்றத்தால் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2017 இல் பதவி விலகினார்.
- ஜாக் சிராக் - பிரான்ஸின் முன்னாள் ஜனாதிபதி, பாரிஸ் மேயராக இருந்த காலத்தில் ஊழல் மற்றும் உறவுமுறையில் குற்றம் சாட்டப்பட்டு 2007 இல் பதவி விலகினார்.

கடுமையான ஊழல் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டாலும் தொடர்ந்து ஆட்சியில் இருக்கும் தலைவர்கள் சிலரின் பட்டியல்:

- விளாடிமிர் புடின் - ரஷ்யாவின் ஜனாதிபதியாக 1999 ஆம் ஆண்டு முதல் ஆட்சியில் இருந்து பல ஊழல் மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டார், ஆனால் தொடர்ந்து ஆட்சியில் இருக்கிறார்.
- ரெசெப் தயிப் எர்டோகன் - துருக்கியின் ஜனாதிபதி 2003 இல் இருந்து ஆட்சியில் இருந்து ஊழல் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டார், ஆனால் தொடர்ந்து ஆட்சியில் இருக்கிறார்.
- நிக்கோலஸ் மதுரோஸ் - வெனிசுலாவின் ஜனாதிபதி 2013 முதல் ஆட்சியில் உள்ளார். ஊழல் மற்றும் மனித உரிமை மீறல்களில் குற்றம் சாட்டப்பட்டவர், ஆனால் தொடர்ந்து ஆட்சியில் இருக்கிறார்.
- ராபர்ட் முகாபே - 1980 முதல் 2017 வரை ஆட்சியில் இருந்த ஜிம்பாப்வேயின் முன்னாள் ஜனாதிபதி. ஏராளமான ஊழல் மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டார், 2017 இல் அவர் பதவி விலகும் வரை அதிகாரத்தில் இருந்தார்.
- அலெக்சாண்டர் லுகாஷென்கோ - 1994 முதல் ஆட்சியில் இருக்கும் பெலாரஸின் ஜனாதிபதி. பரவலான ஊழல், மனித உரிமை மீறல்கள் மற்றும் தேர்தல் மோசடிகளில் குற்றம் சாட்டப்பட்டவர், ஆனால் தொடர்ந்து ஆட்சியில் இருக்கிறார்.
- ஜி ஜின்பிங் - 2012 ஆம் ஆண்டு முதல் அதிகாரத்தில் இருந்துவரும் சீனாவின் ஜனாதிபதி. சீன கம்யூனிஸ்ட் கட்சிக்குள் பரவலான ஊழல் மற்றும் அரசியல் எதிர்ப்பு மற்றும் மனித உரிமைகளை ஒடுக்கியதற்காக விமர்சிக்கப்பட்டார்.

ஊடகங்களின் கட்டுப்பாடு, சட்ட அமைப்பைக் கையாளுதல் மற்றும் அரசியல் எதிர்ப்பின் அடக்குமுறை ஆகியவற்றின் மூலம், இவர்களால் அதிகாரத்தில் தங்கள் பிடியைத் தக்க வைத்துக் கொள்ள முடிந்தது.

இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் "அதானி" என்னும் முழு பூசணிக்காயை ஒருவர் சோற்றில் மறைக்க முயற்சிக்கிறார். அவர் வெறும் அம்புதான். வரலாற்றில் இந்த அம்பின் பெயர் வேண்டுமானால் இந்த இரண்டு பட்டியல்களுள் ஒன்றில் சேர்க்கப்படலாம். ஆனால் அம்புகளைத் தொடர்ந்து எய்து வரும் பார்ப்பனியக் கூட்டத்தின் சூழ்ச்சியை நாம் தோலுரிக்க வேண்டும்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

சமூக மத நல்லிணக்க மாநாடு

வரும் 19 ஆம் தேதி வேலூரில்

அரசியல் கடந்து மதம் கடந்து இந்து இசுலாமிய கிறித்தவத் தலைவர்களையும் அதனதன் மக்களையும் ஒருங்கிணைத்து மதவாதத்துக்கு எதிராக ஒன்றுபட்டு நிற்கும் மாநாடு.

திரு. சத்தியவேல் முருகனார்
Fr.ஜெகத் கஸ்பர்
விஜடி வேந்தர் திரு. விசுவநாதன்
கரு. பழனியப்பன்

மாண்புமிகு துரைமுருகன்,
நீர்வளத் துறை அமைச்சர்
மாண்புமிகு ஜெகத்ரட்சகன்,
மக்களவை உறுப்பினர்

அன்புடன் அழைக்கும்
பேராசிரியர் சுப வீரபாண்டியன்
ஆ.சிங்கராயர்